





# இறையரசின் அஸ்திபாரம்

பாடம் 9 ஜூன் 1, 2024






"அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசு கிறிஸ்துவைக்குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று."

(வெளிப்படுத்தல் 12:17)



நம்மை சுற்றியுள்ள உலகத்தை அவதானிப்பதன் மூலம், தேவன் அதை நிர்வகிக்கும் சட்டங்களை உருவாக்கினார் என்பதை காணலாம். உதாரணமாக, ஒரு உயிரினத்தின் வளர்ச்சி மற்றும் வளர்ச்சியின் வழியை தீர்மானிக்கும் சட்டங்கள். பூமி சூரியனை அதன் நிலையான பாதையில் அதிக வேகத்தில் சூழலும் போது நாம் தூக்கி எறியப்படுதை தடுக்கும் ஒரு சட்டம் உள்ளது.



நாம் எவ்வாறு செயல்படவேண்டும் என்பதை குறிக்கும் ஒரு சட்டத்தையும் தேவன் உருவாக்கினார், மேலும் இந்த உலகில் வசிப்பவர்களும் தேவதூதர்கள் உட்பட மற்ற உலகங்களில் வசிப்பவர்களும் நிர்வகிக்கப்படுகிறார்கள்.

பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு ஞானமான காரியத்திலும் தேவன் இந்த சட்டத்தை பொருத்துகிறார் (ரோ. 2:15). என்றாலும், பாவம் நம்மில் உள்ள சட்டத்தை சிதைத்துவிட்டது. எனவே, தேவனே அதை குரல் மூலமாகவும் எழுத்து மூலமாகவும் நமக்கு அனுப்பவேண்டியிருந்தது (உபா. 4:13).





**நியாயப்பிரமாணம்:**

- பிரபஞ்ச ஆசரிப்புக்கூடாரத்தில் சட்டம்.
- நித்திய நியாயப்பிரமாணம்.

**ஓய்வுநாள்:**

- ஓய்வுநாளின் அர்த்தம்.
- ஓய்வுநாளும் முடிவுக்காலமும்.

**நியாயப்பிரமாணம், ஓய்வுநாள் மற்றும் தொழுகை.**


நியாயப்பிரமாணம்

# பிரபஞ்ச ஆசரிப்புக்கூடாரத்தில் நியாயப்பிரமாணம்

"அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது, அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது;" (வெளிப்படுத்தல் 11:19)



யோவான் பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டதையும், ...ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டியையும் "காண்கிறார்"(வெளி. 11:19). அதுவரை பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் உடன்படிக்கை பெட்டி மறைத்து வைக்கப்பட்டிருந்ததா? இந்த தரிசனம் எதை பிரதிபலிக்கிறது?

தரிசனத்தை புரிந்துகொள்ளும்படியாக, பூலோக ஆசரிப்புக் கூடாரத்தையும் அதில் ஆசரிக்கக்கூடிய சடங்குகளையும் நாம் பார்க்க வேண்டும்.



வருடமுழுவதும் உடன்படிக்கை பெட்டி "மறைக்கபட்டிருக்கும்", பாவநிவாரண நாளில் மாத்திரம் "காணப்படும்" (லேவி. 16:2, 12-13). அன்று நியாயத்தீர்ப்பு நடைபெற்றது, பாவங்கள் நிச்சயமாய் ஒழிக்கப்பட்டது (லேவி. 16:30).

யோவானுக்கு கொடுக்கப்பட்ட தரிசனம் குறிப்பது என்னவென்றால், 11ஆம் அதிகாரத்தின் தரிசனங்களுக்கு பிறகு(உ.தா., 19ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் வேதாகமம் வெகுவாக பரவியபின்), பரலோகத்தின் நியாயத்தீர்ப்பு துவங்கும்.

பூலோகத்தின் நகலைப் போல, பரலோக உடன்படிக்கை பெட்டியிலும் 10 கற்பனைகள் இருந்தது, அதினால் நாம் நியாயந்தீர்க்கப்படுவோம். அதின்மேல் கிருபாசனம் இருந்தது, தெய்வீக கிருபையின் அடையாளம், அங்கேதான் இயேசுவின் இரத்தம் நம் பாவங்களை மூடும் (1பேது. 1:18-19; 1யோ. 2:2; சங். 85:10).


# நித்திய நியாயப்பிரமாணம்

"நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்." (மத் 5:17)



இயேசு சிலுவையில் 10 கட்டளைகளை ஒழித்தார் என்று இப்போது கேள்விப்படுவது மிகவும் பொதுவானது என்றாலும், அது சீர்திருத்தவாதிகளின் போதனை அல்ல, வேதம் கற்பிப்பதும் அதுவல்ல.

சிலுவையில், பூமிக்குரிய ஆசரிப்புக்கூடாரத்தின் சட்டதிட்டங்களும் சடங்குகளும் செல்லுபடியாகாமற்போனது உண்மையானாலும், அது தார்மீக சட்டத்துக்கு பொருந்தாது (எபே. 2:15).



தேவனுடைய நியாயப்பிரமாணம் நித்தியமானது, காலத்தால் அழியாதது, பூரணமானது, மற்றும் தேவனால் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு சிருஷ்டிப்பின் நடத்தையையும் நிர்வகிக்கிறது (சங். 19:7; 119:142; ரோ. 7:7, 12, 16, 22, 25; 1யோ. 3 :4).

உண்மையில், நியாயப்பிரமாணம் நித்தியமானது ஏனென்றால் அது தேவனுடைய குணத்தின் ஆகச்சிறந்த பிரதிபலிப்பு.

**தேவனுடைய குணம்**

- "நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்;"(சங். 89:14)
- "கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும்." (சங். 89:14)

**நியாயப்பிரமாணம்**

- "உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்;" (சங். 119:172)
- "உம்முடைய வேதம் சத்தியம்" (சங். 119:142b)


ஓய்வுநாள்

# ஓய்வுநாளின் அர்த்தம்

"ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக;" (யாத் 20:8)



இரண்டு காரணங்களுக்காக ஓய்வுநாளை ஆசரிக்க வேண்டும் என்று 4ஆம் கற்பனை வலியுறுத்துகிறது: ஏனென்றால் தேவன் நம்மை சிருஷ்டித்தார் (யாத். 20:8-11); மற்றும் அவர் நம்மை மீட்டிருக்கிறார் (உபா. 5:12-15).

நமக்கு, நம் சிருஷ்டிகரை துதிப்பதற்கு ஓய்வுநாள் வாரத்தில் ஒரு இடைவெளியாய் இருக்கிறது; தேவனுடைய மீட்பின் அன்பை தியானிக்க வேண்டும்; புதிய சிருஷ்டிப்பில் அவரோடு நாம் வாழ்வோம் என்ற வாக்குத்தத்ததை நினைவுகூர வேண்டும். இந்த வகையை புரிந்துகொண்டு, ஓய்வுநாள் தேவனிடமிருந்து வருகிற ஒரு விசேஷித்த ஆசீர்வாதம்.





மறுபுறம், நாம் அவரை விட்டு பிரிந்தாலும் அவருடைய அன்பு நம்மை கைவிடுவதில்லை என்பதை ஓய்வுநாள் எப்போதும் நினைப்பூட்டுகிறதாயிருக்நிறது. அது ஒரு ஓய்வின் அடையாளம், வேலைகளுக்கு அல்ல; கிருபை, கிரியையல்ல; பாதுகாப்பு, கண்டனம் அல்ல; நம்மை இரட்சிக்கும்படி தேவனை சார்ந்திருத்தல், நம் சொந்த உழைப்பை சார்ந்து அல்ல.

ஓய்வுநாளை கைகொள்வதன் மூலம், நாம் தேவனுக்கு நம் விசுவாசத்தையும் அவரை மட்டுமே வணங்க வேண்டும் என்ற வாஞ்சையையும் வெளிப்படுத்துகிறோம்.

# ஓய்வுநாளும் முடிவுக்காலமும்

"மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலைசெய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங்கொடுக்கப்பட்டது."
(வெளிப்படுத்தல் 13:15)



இவ்வுலகை தேவனை விட்டு பிரிப்பதற்கு பலவிதமான வல்லமைகளை சாத்தான் பயன்படுத்துவதை வெளிப்படுத்தல் 13 விவரிக்கிறது. இந்த அதிகாரத்தில் எல்லாமே தொழுகையை தொடர்புப்படுத்துகிறது (வெளி. 13:4, 8, 12, 15).

குறிப்பிடப்பட்ட வல்லமைகளில் ஒன்று தானியேல் 7ல் சொல்லப்பட்டுள்ள சிறிய கொம்புடன் தொடர்புடையது, அதுவே காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைக்கும் (வெளி. 13:5; தானி. 7:25 – ஒரு காலம், காலங்கள் மற்றும் அரைக்காலம் அதுவும் 42 மாத காலமும் ஒன்றே).




இந்த வல்லமை இரண்டாவது கற்பனையை ரத்து செய்தது (விக்கிரக வழிபாடு), நான்காம் கற்பனையை மாற்றியது (வழிபாட்டின் நாள்), சனிக்கிழமையின் புனிதத்தை ஞாற்றுக்கிழமைக்கு மாற்றியது.

இறுதி தருணங்களில், வாங்குவதையும் விற்பதையும் தடை செய்வதன் மூலம் ஒரு "உருவத்தை" வழிபடும்படி அது கட்டாயபடுத்தும் [ஓய்வுநாளில் செய்யக்கூடாத காரியங்கள்] (வெளி. 13:14-17). இந்த "மிருகத்தின் முத்திரை" என்பது தேவனால் நிறுவப்பட்ட சனிக்கிழமைக்கு பதிலாக, மனிதனால் நிறுவப்பட்ட ஞாயிற்றுக்கிழமையை வழிபாட்டு நாளாக ஏற்றுக்கொள்பவர்களை பற்றி நமக்கு சொல்லும் சின்னமாகும்.




நியாயப்பிரமாணம்,
ஒய்வுநாள் மற்றும்
தொழுகை

«மிகுந்த சத்தமிட்டு: "தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது: வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள்" என்று கூறினான்.» (வெளிப்படுத்தல் 14:7)



இறுதிக்காலங்களில் அறிவிக்கப்படும் முப்பரிமாண செய்தி, தொழுகையோடும் ஓய்வுநாளோடும் தேவனுடைய நியாயப்பிரமாணத்தோடும் இணைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| முதல் தூது | வெளிப்படுத்தல் 14:6-7 | நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தமாகுதல் (அதன் தரம் நியாயப்பிரமாணம்), சிருஷ்டிகரை தொழுதுகொள்ளுதல் (ஓய்வுநாள் இதை நமக்கு ஞாபகப்படுத்துகிறது) |
| இரண்டாம் தூது | வெளிப்படுத்தல் 14:8 | தேவனுக்கு தவறான தொழுகையை தரக்கூடிய மத அமைப்புகளிலிருந்து வெளியே வருதல் |
| மூன்றாம் தூது | வெளிப்படுத்தல் 14:9-11 | யாரை, எப்போது தொழுதுகொள்வது என்ற தீர்மானத்தை எடுத்தல்: தேவனை, ஓய்வுநாளை ஆசரித்தல்; அல்லது எதிரியையும், அவனுடைய முத்திரையையும் ஏற்றுக்கொள்ளுதல் |



இறுதிகாலங்களில் உறுதியாக நிற்பவர்களுக்கு இரண்டு குணங்கள் கொடுக்கப்படும்: "தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்கள்" (வெளி. 14:12).

அந்த நெருக்கடியான தருணங்களில் கற்பனைகளை கைகொள்வதற்கு, அவர்கள் அசைக்கமுடியாத, ஆழமான, நிச்சயமான, வெல்லமுடியாத இயேசுவின் விசுவாசத்தை பெற்றுக்கொள்ளவேண்டும்.

“ஓய்வுநாள் மாத்திரம் உலகளவில் கடைபிடிக்கப்பட்டிருந்தால், மனிதனின் எண்ணங்களும் உணர்வுகளும் பயபக்தி மற்றும் வழிபாட்டின் பொருளாக சிருஷ்டிகரிடம் வழிநடத்தபட்டிருக்கும், சிலை வழிபாட்டாளரோ, நாத்திகரோ, அல்லது கடவுள் நம்பிக்கையில்லாதவரோ இருந்திருக்கமாட்டார்கள். ஓய்வுநாளை கைகொள்வதென்பது உண்மையான தேவனுக்கு, “வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவருக்கு” விசுவாசமாக இருப்பதற்கான அடையாளம். அதை தொடர்ந்து வரக்கூடிய செய்தி, தேவனை தொழுதுகொண்டு அவருடைய கற்பனைகளை கைகொள்ளும்படி கட்டளையிடுகிறது, விசேஷமாக நான்காம் கற்பனையை கைகொள்ளும்படி அழைப்பும் கொடுக்கப்படுகிறது”

எலன் ஜி உவைட் (மாபெரும் ஆன்மீக போராட்டம், பக். 437)